CC.No. 182/2023
PW – 2
02.06.2026
பெயர் : விஜய்
த/பெ. : சுப்பிரமணியன்

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்துபோன ராஜேஷ்ம் நானும் நெருங்கிய உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் மேற்படி ராஜேஷ் என்ன காரணத்திற்காக எங்கு சென்று கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது. வாகனங்கள் மோதிக்கொண்ட சத்தம் கேட்டுதான் நான் அங்கு பார்த்தேன். சம்பவ சமயத்தில் இரு சக்கர வாகனத்தை எங்களில் யார் ஓட்டி சென்றார் என்பது குறித்தோ, நான் மட்டும் எனது சகோதரர் சென்றதாக கூறும்போது யார் பின் இருக்கையில் அமர்ந்து சென்றோம் என்பது குறித்தோ நான் எனது போலிஸ் விசாரணையில் கூறவில்லை. விபத்து குறித்து நான் தான் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு போன் செய்தேன். ஆம்புலன்சுடன் நான் மருத்துவமனை சென்றேன். விபத்து நடந்த சங்கதி குறித்து நான் தான் மருத்துவரிடம் கூறினேன். ரோட்டில் உள்ள மையக்கோட்டிற்கு இடதுபக்கம் தான் விபத்து நடந்தது. எத்தனை அடி தூரத்தில் நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்த ரோட்டில் இரு வாகனங்கள் ஒரே சமயத்தில் செல்ல முடியும் என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டில் வாகனங்கள் அதிகமாக செல்லும் என்று சொன்னாலும் சரிதான். மருத்துவமனையில் நான் கொண்டு போய் சேர்க்கும்போது பகல் சுமார் மணி 12 இருக்கும். எனக்கு முன்பாக இரு சக்கர வாகனத்தில் சென்ற ராஜேஷ் தலைகவசம் அணிந்திருந்தாரா என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ராஜேஷின் தாயாருக்கு விபத்து குறித்து நான் தான் தகவல் சொன்னேன். ராஜேஷின் செல்போனில் இருந்து தான் தகவல் சொன்னேன். போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த மறுநாள் போலிசார் என்னை விசாரித்தார்கள். இறந்துபோன ராஜேஷ் விபத்து சமயத்தில் ஒரு டாடா சுமோ காரை முந்தி செல்லும்போதுதான் விபத்து நடந்தது என்று

சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் ராஜேஷ் மது அருந்தியிருக்கவில்லை. விரைவாக சென்று சினிமா படம் பார்க்க வேண்டும் என்ற அவசரத்தில் ராஜேஷ்தான் வேகமாக வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை தன்னிச்சையாக ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- விஜய்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

CC.No.182/2023
PW – 3
02.06.2026
பெயர் : ரஞ்சித்
த/பெ. : சுப்பிரமணியன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன ராஜேஷை அதற்கு முன்பு எனக்கு பழக்கம் இல்லை. இரண்டு வாகனங்களும் டமார் என்று மோதிக்கொண்ட சத்தம் கேட்டுதான் நான் ஓடி சென்று பார்த்தேன். விபத்தில் ஈடுபட்ட இரு வாகனங்களின் பதிவு எண்கள் எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடத்திற்கு நான் வரும்போது பகல் மணி 11.30 இருக்கும். என்னுடைய வீட்டில் இருந்து சம்பவம் நடந்த இடம் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். எனது வீட்டில் இருந்து அப்போது சுமார் 11.00 மணியளவில் கிளம்பினேன். நானும் மருத்துவமனைக்கு சென்றேன். விபத்து சம்பவம் தொடர்பாக நான் மருத்துவரிடம் எதுவும் கூறவில்லை. விபத்து குறித்து எனது அண்ணன்தான் எடுத்துரைத்து தகவல் குறிப்பில் கையெழுத்து செய்தார். விபத்து நடந்த இடத்தில் கனரக வாகனங்கள் அதிகமாக சென்று வரும் என்று சொன்னால் சரிதான். இறந்துபோன ராஜேஷின் பெற்றோருக்கு விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு எனது அண்ணன் தான் தகவல் சொன்னார். இறந்துபோன ராஜேஷ் சம்பவ சமயத்தில் அவசரமாக சினிமாவிற்கு செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் வாகனத்தை தாறுமாறாக ஓட்டி சென்று தாமாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் வைத்து விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநரை நான் பார்த்தேன். சம்பவ இடத்தில் வைத்து நான் லாரி ஓட்டுநரை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடைபெற்ற தேதிக்கு பிறகு நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனது அண்ணன் தான் சென்று வந்தார். சம்பவ இடமானது தென்வடல்ரோடு ஆகும். அதில் ரோட்டின் கிழக்கு பக்கம் ரைஸ் மில்லும், மேற்கு பக்கம் வீடுகளும் இருந்தது. நான் சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னாலும் விபத்து குறித்து எனக்கு எந்த தகவலும் தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் காவல் நிலையம் செல்லவில்லை.

Sd/– ரஞ்சித்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.